பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 05 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. அதிகரித்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப திறன்வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

3. நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தலைவர்களின் வரலாறுகளை ஆவனப்படுத்தும் வகையில் பணிகள் நடைபெற்று வருவதாக மத்தியஇணையமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

4. வங்கிகளில் நகை அடமானக் கடனுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய நிபந்தனைகளை ரிசர்வ் வங்கி திரும்பப்பெற வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களுரு – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

வடகிழக்கு மாநிலங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் வளர்ச்சியடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வடகிழக்குப் பகுதி முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டை அவர் தொடங்கிவைத்து பேசினார்.

வடகிழக்கு மாநிலங்களின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று பிரதமர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய வடகிழக்கு பகுதி மேம்பாட்டு அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா, நாட்டின் பிறபகுதிகளுடன் வடகிழக்கு மாநிலங்களை இணைக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இப்பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் உத்வேகம் பெற்று வருவதாக அவர் கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களில் 17 விமான நிலையங்கள் செயல்பாட்டில் இருப்பதாகவும், இரண்டாயிரத்திற்கும் அதிகமான விமானங்கள் இயக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டம், உலகிற்கான உற்பத்தி, வடகிழக்கு மாநிலங்களின் உற்பத்தி போன்ற மத்திய அரசின் பல்வேறு திட்டங்களில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று திரு ஜோதிராதித்ய சிந்தியா அழைப்பு விடுத்தார்.

>><><><><<

அதிகரித்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப திறன்வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தொழில்துறை நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்ற வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை எட்டுவதற்கு திறன்மேம்பாட்டு நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டார்.

உலகளவிலான வர்த்தகப் போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் உற்பத்தித் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து அவர் வலியுறுத்தினார்.

உற்பத்தி, பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் புத்தொழில் நிறுவனங்கள் அதிகரித்து வருவதற்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் திறமை வாய்ந்த தொழிலாளர்கள் தேவைக்கான இடைவெளியை குறைக்கும் வகையில், திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

செமி கண்டெக்டர் உற்பத்தி, செயற்கை நுண்ணறவு தொழில்நுட்பம், ரோபோட்டிக்ஸ், தேசிய பசுமை இயக்கம் போன்ற மத்திய அரசு செயல்படுத்தி வரும் முக்கிய திட்டங்களை திரு அஸ்வினி வைஷ்ணவ் பட்டியலிட்டார்.

>><><><<

இந்தியா – அமெரிக்கா இடையே பரஸ்பரம் பயன்தரும் வகையிலான வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், பரஸ்பரம் இருதரப்பு வளர்ச்சி மற்றும் புவிசார் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் திரு **Howard Lutnick** –வுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், உள்ள வர்த்தக வாய்ப்புகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

>><><><<

தீவிரவாத செயல்களை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக ஜெர்மனி சென்றுள்ள அவர், பெர்லினில் தூதரக அதிகாரிகள் நிலையிலான மாநாட்டில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுடன் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

இந்தியா – ஜெர்மனி இடையேயான பொருளாதார ஒத்துழைப்புகள் மேலும் வலுவடையும் என்று திரு ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

>><><><<

நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட பல்வேறு தலைவர்களின் வரலாறுகளை ஆவனப்படுத்தும் வகையில் பணிகள் நடைபெற்று வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பெரும்பிடுகு முத்தரையர் அஞ்சல் தலை விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

(சவுண்ட் பைட் - முருகன் - 46 செகண்ட்ஸ்)

>><><><<

இனி...

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா **Nirmaljith Singh Sekhon**-னின் வீரதீர சாதனைகள்...

>><><><<

ஏழை, எளிய, நடுத்தர மக்களின் அவசர தேவைகளுக்காக வங்கிகளில் வைக்கப்படும் நகை அடமானக் கடனுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய நிபந்தனைகளை ரிசர்வ் வங்கி திரும்பப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புதிய நிபந்தனைகளால் வங்கிகளில் நகைக்கடன் பெறும் ஏழை மக்கள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என தெரிவித்துள்ளார்.

மக்களின் நலன் கருதி புதிய நிபந்தனைகளை உடனடியாக திரும்பப் பெறுவதுடன் தனியார் நகைக் கடைகளில் வாங்கப்படும் தங்க காசுகளின் தரத்தை பரிசோதித்து கடன் வழங்க வகை செய்ய வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

>><><><<

கேரளாவில் பத்தனம்திட்டா, இடுக்கி, எர்ணாகுளம் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த பகுதிகளுக்கு ஆரஞ்சு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 7 மாவட்டங்களில் கனமழைக்கான மஞ்சள் நிற எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களுரு அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

-----------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரியா பாட்டியா – ருமேனியாவின் எலினா கேடர் இணை, இன்று சுவிட்சர்லாந்தின் **Jenny Duerst** – கனடாவின் **Plekhanova** இணையை எதிர்கொள்கிறது.